**றுஹுண பல்கலைக்கழகம்**

# வெற்றிடம்

## நிதியாளர் பதவி

**(POST OF BURSAR)**

றுஹுண பல்கலைக்கழகத்தின் நிதியாளர் பதவிக்கு பொருத்தமான தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**தகுதிகள்:**

1. (அ) இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் (CASL) அங்கத்துவம் தகுதி அல்லது அதற்கு இணையான தகுதியைப் பெற்றிருக்க வேண்டும்.

   **மற்றும்**

   (ஆ) மேலே 1 (அ)-வில் உள்ள தகுதியைப் பெற்றுக்கொண்டதன் பின் நிர்வாக மட்டத்தில் கணக்கியல் மற்றும்/அல்லது கணக்காய்வில் குறைந்தது ஆறு (06) வருடங்கள் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

   **அல்லது**

2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அல்லது உயர் கல்வி நிறுவனம்/நிறுவனங்களில் பிரதி கணக்காளர்/ பிரதி நிதியாளர்/ பிரதி உள்ளக கணக்காய்வாளர் பதவியை வகிப்பவராகவும், பின்வரும் தகுதிகளைப் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.
   - மேற்கூறிய பதவியில் மூன்று (03) வருடங்கள் திருப்திகரமான சேவை மற்றும் அந்தப் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல். அதில் ஒரு (01) வருடம் மேலே 1 (அ)-வில் உள்ள தகுதியைப் பெற்ற பின் பெற்றிருக்க வேண்டும்.

   **அல்லது**

3. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அல்லது உயர் கல்வி நிறுவனம்/நிறுவனத்தில் சிரேஷ்ட உதவி கணக்காளர்/ சிரேஷ்ட உதவி நிதி முகாமையாளர்/ சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர் பதவியை வகிப்பவராகவும், பின்வரும் அனைத்து தகுதிகளையும் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.
   - மேற்கூறிய பதவியில் உறுதிப்படுத்தப்பட்டு, நிர்வாக மட்டத்தில் கணக்கியல் மற்றும்/அல்லது கணக்காய்வில் பத்து (10) வருடங்கள் அனுபவம் பெற்றிருத்தல்
   - மேற்கூறிய பத்து (10) வருடங்களில் குறைந்தது எட்டு (08) வருடங்கள் பல்கலைக்கழக முறைமைக்குள் சிரேஷ்ட உதவி கணக்காளர்/ சிரேஷ்ட உதவி நிதி முகாமையாளர்/ சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர் பதவியில் திருப்திகரமான சேவையைக் கொண்டிருக்க வேண்டும்.
   - மேற்கூறிய எட்டு (08) வருடங்கள் அனுபவத்தில் மூன்று (03) வருடங்கள் மேலே 1 (அ)-வில் உள்ள தகுதியைப் பெற்ற பிறகு பெற்றிருக்க வேண்டும்.

   **அல்லது**

4. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு/ உயர்கல்வி நிறுவனம்/ நிறுவனத்தில் பிரதி கணக்காளர்/ பிரதி நிதி முகாமையாளர்/ பிரதி உள்ளகக் கணக்காய்வாளர் பதவியை வகிக்கும் மற்றும் பின்வரும் அனைத்து தகுதிகளையும் பெற்ற ஒரு நபர்
   - மேற்கூறிய பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல்
   - இலங்கை பட்டய கணக்காளர்கள் நிறுவனத்தின் (CASL) இடைநிலைத் தகுதியையோ அல்லது அதற்கு இணையான தகுதியையோ பெற்றிருக்க வேண்டும்.
   - அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்/ உயர்கல்வி நிறுவனத்திலிருந்து கணக்கியல்/ நிதி/ முகாமைத்துவம்* ஆகியவற்றில் முதுமாணிப் பட்டம் பெற்றிருத்தல்
   - CASL-இன் இடைநிலைத் தகைமை அல்லது அதற்கு இணையான தகைமையை வெற்றிகரமாக முடித்த பிறகு நிர்வாக மட்டத்தில் கணக்கியல் மற்றும்/அல்லது கணக்காய்வு பன்னிரெண்டு (12) வருடங்கள் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்
   - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு/ உயர்கல்வி நிறுவனம்/ நிறுவனத்தில் சிரேஷ்ட உதவி கணக்காளர்/ சிரேஷ்ட உதவி நிதி முகாமையாளர்/ சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர் அல்லது அதற்கு மேலான பதவியொன்றில் மேற்கூறிய பத்து (10) வருட கால அனுபவம் மற்றும் பின்வரும் அனைத்து தகைமைகளைப் பெற்றிருக்க வேண்டும்

   **அல்லது**

5. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு/ உயர்கல்வி நிறுவனம்/ நிறுவனத்தில் பிரதி கணக்காளர்/ பிரதி நிதி முகாமையாளர்/ பிரதி உள்ளகக் கணக்காய்வாளர் பதவியை வகிக்கும் மற்றும் பின்வரும் அனைத்து தகுதிகளையும் பெற்ற ஒரு நபர்
   - மேற்கூறிய பதவியில் உறுதிப்படுத்தப்பட்டு, அப்பதவியில் மூன்று (03) வருட காலம் திருப்திகரமான சேவையாற்றியிருக்க வேண்டும்
   - அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்/உயர்கல்வி நிறுவனத்திலிருந்து ஆரம்பப் பட்டத்தைப் பெற்றிருக்க வேண்டும்
   - இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் (CASL) இடைநிலைத் தகைமை அல்லது அதற்குச் சமமான தகைமை

   **அல்லது**

   - இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் (SLIATE) அல்லது அதன் முன்னோடி நிறுவனத்தால் நடத்தப்படும் கணக்கியலில் உயர் தேசிய டிப்ளோமா (HNDA);
   - மேற்கூறிய இடைநிலைத் தகைமை/HNDA-யைப் பெற்றதன் பின் நிர்வாக மட்டத்தில் கணக்கியல் மற்றும்/அல்லது கணக்காய்வில் பதினான்கு (14) வருடகால அனுபவம்
   - அத்தகைய அனுபவத்தில் பல்கலைக்கழக முறைமைக்குள் U-EX 2 (1) சம்பளக் குறியீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பள அளவில் பிரதி கணக்காளர்/ பிரதி நிதியாளர்/ பிரதி உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும்/அல்லது சிரேஷ்ட உதவி கணக்காளர்/ சிரேஷ்ட உதவி நிதியாளர் / சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர் பதவியில் குறைந்தது ஐந்து (05) வருட காலம் இருந்திருக்க வேண்டும்.

   **அல்லது**

6. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு/ உயர்கல்வி நிறுவனம்/ நிறுவனத்தில் பிரதி கணக்காளர்/ பிரதி நிதியாளர்/ பிரதி உள்ளகக் கணக்காய்வாளர் பதவியை வகிக்கும் மற்றும் பின்வரும் அனைத்து தகுதிகளையும் பெற்ற ஒரு நபர்
   - மேற்கூறிய பதவியில் உறுதிப்படுத்தப்பட்டவராக இருத்தல்
   - அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்/ உயர்கல்வி நிறுவனத்திலிருந்து ஆரம்பப் பட்டத்தைப் பெற்றிருத்தல்

   **அல்லது**

   இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் (CASL) இடைநிலைத் தகைமை அல்லது அதற்கு இணையான தகைமையைப் பெற்றிருத்தல்

   **அல்லது**

   இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் (SLIATE) அல்லது அதன் முன்னோடி நிறுவனத்தால் நடத்தப்படும் கணக்கியலில் உயர் தேசிய டிப்ளோமா (HNDA);
   - பல்கலைக்கழக முறைமைக்குள் கணக்கியல் மற்றும்/அல்லது கணக்காய்வில் பதினெட்டு (18) வருடங்களுக்குக் குறையாத அனுபவம் பெற்றிருத்தல்
   - பல்கலைக்கழக முறைமையில் பிரதி கணக்காளர்/ பிரதி நிதி முகாமையாளர்/ பிரதி உள்ளகக் கணக்காய்வாளர் பதவியில் மேற்கூறியவற்றின் மூன்று (03) வருடகால அனுபவம்.

   **அல்லது**

7. இலங்கை கணக்கியல் சேவையில் இரண்டாம் தர கணக்காளர் பதவியை வகிக்கும் மற்றும் பின்வரும் தகுதிகளைப் பெற்றிருத்தல்
   - இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் (CASL) அங்கத்துவம் அல்லது அதற்கு இணையான தகைமை.
   - அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்/ உயர்கல்வி நிறுவனத்திலிருந்து கணக்கியல்/ நிதி/ முகாமைத்துவம்* ஆகியவற்றில் முதுமாணிப் பட்டம்.

**குறிப்பு:** "கணக்கியல் மற்றும்/அல்லது தணிக்கை" என்பதில் உள்ள அனுபவம் என்பது, ஒரு பொது அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனத்தில் நிர்வாக மட்டத்தில் கணக்கியல் மற்றும்/அல்லது தணிக்கையில் பெற்ற அனுபவத்தைக் குறிக்கும்.

✷ "முகாமைத்துவம்" என்ற சொல் கணக்கியல் மற்றும் நிதியை ஒரு முக்கிய அங்கமாகக் கொண்ட முகாமைத்துவம்/ பொது நிர்வாகம்/ வியாபார நிர்வாகத்தில் பெற்ற பட்டத்தைக் குறிக்கிறது.

**சம்பள அளவு**

U-EX 3 (II) - ரூபா 166,130 - 7 x 3,900; 11 x 4,850 – 246,780 மாதாந்தம்.

(இதற்கு மேலதிகமாக பல்கலைக்கழக முறைமைக்கு இயைபாக செலுத்தப்படும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் ஏற்புடையதாகும்)

**அனுகூலங்கள்:**

- மேற்கூறிய பதவியில் இருப்பவர் தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் கொடுப்பனவுடன் கூடிய உத்தியோகபூர்வ வாகனத்திற்குத் தகுதியுடையவர் ஆவார்.
- மேற்கண்ட பதவியில் இருப்பவர் தொடர்புடைய விதிகளின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட சேவைக் காலத்தை நிறைவு செய்த பிறகு, முழு சம்பளத்துடன் கூடிய ஏழு ஆண்டு ஓய்வுகால விடுமுறைக்குத் (Sabbatical Leave) தகுதியுடையவர் ஆவார்.
- தெரிவு செய்யப்படும் அபேட்சகர் தற்போதுள்ள விதிமுறைகளின் பிரகாரம் பல்கலைக்கழக சேமலாப நிதியம் மற்றும் பல்கலைக்கழக ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்பவராக இருப்பார். நியமனம் செய்யப்படுபவர் தனது மாதச் சம்பளத்தில் 10%-ஐ சேமலான நிதிக்கு (Provident Fund) பங்களிக்க வேண்டும், அதே நேரத்தில், தொழில் தருநர் அந்தச் சம்பளத்தில் 15%-க்கு சமமான தொகையைப் பங்களிப்பார் (அதில் 08% ஓய்வூதியத் திட்டத்திற்கும், 07% சேமலாப நிதிக்கும் மற்றும் 03% ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கும் (ETF) வரவு வைக்கப்படும்).

நியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்து கட்டாய ஓய்வு பெறும் வயது வரை (கல்வி சாரா வகை - வயது 60) இருபது (20) ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் பல்கலைக்கழக அமைப்பில் பணியாற்ற முடியாத பணியாளர்கள், பல்கலைக்கழக ஓய்வூதிய நிதிக்கு பங்களிக்கத் தேவையில்லை மற்றும் அதன் உறுப்பினர்களாகவும் ஆக முடியாது.

**பணிக்கொடை**

பணிக்கொடைப் பணம், 1983-ஆம் ஆண்டின் பணிக்கொடைச் சட்டம் எண் 12-இன் விதிகளுக்கு இணங்க வழங்கப்படுகிறது.

**பொதுவான குறிப்பு**

- இந்த நியமனம் மூன்று (03) வருடங்கள் தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது, இது றுஹுண பல்கலைக்கழகத்தின் பேரவை அபிப்பிராயத்தின் பிரகாரம் நீட்டிக்கப்படலாம். இருப்பினும், ஆணைக்குழு அல்லது ஒரு உயர் கல்வி நிறுவனத்தில் ஏற்கனவே பணிபுரியும் ஒரு ஊழியர் பின்னர் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டால், அவர் முதலில் ஒரு (01) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டவர் ஆவார், அதன் பிறகு றுஹுண பல்கலைக்கழகத்தின் நிர்வாக அதிகாரத்தினால் உறுதிப்படுத்தலுக்கு உட்பட்டவர் ஆவார்.
- நியமனத்தின் ஏனைய நிபந்தனைகள் பல்கலைக்கழகங்கள் சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் நிறுவனக் குறியீடு, கட்டளைகள், துணை விதிகள், ஒழுங்குமுறைகள் மற்றும் விதிகள் போன்றவற்றின் பிரகாரம் இருக்கும்.
- வயது எல்லை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள்/ நிறுவனங்களின் நிறுவனக் குறியீட்டின் தொடர்புடைய விதிகளின் பிரகாரம் கவனத்திற் கொள்ளப்படும்.

**தெரிவு முறை:**

அ) ஒரு கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு மூலம் தெரிவு செய்யப்படும்.

ஆ) கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வில் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர்கள் மட்டுமே தெரிவு செய்வதற்கான பரிசீலனைக்குத் தகுதி பெறுவார்கள்.

**விண்ணப்பிக்கும் முறை:**

1. மேற்கூறிய பதவிக்கான விண்ணப்பத்தை (https://application.ruh.ac.lk/regapp/) ருஹுண பல்கலைக்கழக இணையதளத்தின் (www.ruh.ac.lk) "Career Opportunities" பிரிவில் வழங்கப்பட்டுள்ள இணைப்பிலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளக்கூடிய, பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தைப் பயன்படுத்திச் சமர்ப்பிக்க வேண்டும்.
2. விண்ணபத்துடன் தொடர்புடைய கல்வி (Transcript உட்பட)/ தொழில்முறை/ பாடத்திட்டத்திற்கு அப்பாற்பட்ட மற்றும் சேவைச் சான்றிதழ்களின் சான்றளிக்கப்பட்ட பிரதிகளை அனுப்ப வேண்டும். விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியில் பெறப்பட்ட தகுதிகள், அனுபவம் அல்லது ஏனைய திறன்கள் மட்டுமே கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வில் மதிப்பீட்டிற்காக கவனத்திற் கொள்ளப்படும். நேர்முகத் தேர்வின் போது, அதற்குப் பின் சமர்ப்பிக்கப்படும் அல்லது விண்ணபத்துடன் உள்ளடக்கப்படாத எந்தவொரு சான்றிதழ்களும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
3. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட மூலப் பிரதி விண்ணப்பம், சான்றளிக்கப்பட்ட இணைப்புகளுடன் (அச்சுப் பிரதிகள்) பின்வருமாறு இருக்க வேண்டும்:

   அ. ஒரே PDF கோப்பாக ஸ்கேன் செய்யப்பட்டு, அதன் ஒரு பிரதி 2026-07-14ஆம் திகதி அல்லது அதற்கு முன் recruitment.na@admin.ruh.ac.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

   ஆ. அச்சிட்ட பிரதியாக தொடர்புடைய அனைத்து சான்றிதழ்களின் பிரதியுடன் துணை வேந்தர், றுஹுண பல்கலைக்கழகம், வெல்லமடம, மாத்தறை எனும் முகவரிக்கு அவர்களை 2026-07-14ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் அனுப்பப்பட வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் பதவியின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

   தற்போது பல்கலைக்கழக முறைமை, அரசாங்கத் துறை, அரச கூட்டுத்தாபனம் அல்லது நியதிகள் சபையில் பணிபுரியும் விண்ணப்பதாரர்கள், தத்தமது நிறுவனத்தின் தலைவர் மூலமாகவே தங்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.
4. விண்ணபத்தில், விண்ணப்பதாரர்கள் தாங்கள் விண்ணப்பிக்கும் தொடர்புடைய வகையைக் குறிப்பிட வேண்டும்.
5. விண்ணப்பதாரர்கள் மீளளிக்கப்படாத விண்ணப்பக் கட்டணமாக 1000.00 ரூபா செலுத்த வேண்டும், மேலும் அதற்கான பற்றுச்சீட்டை முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் இணைக்க வேண்டும். கட்டணத்தை ருஹுண பல்கலைக்கழகத்தின் 0322001002477589 எனும் நடைமுறைக் கணக்கிலக்கத்திற்கு செலுத்தலாம் அல்லது https://pay.ruh.ac.lk வழியாகச் செலுத்தலாம்.
6. விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்யும் உரிமை பல்கலைக்கழகத்திற்கு உண்டு. இறுதி நாளுக்குப் பின் பெறப்பட்ட விண்ணப்பங்கள், மேற்கூறிய தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் அல்லது முழுமையற்ற விண்ணப்பங்கள் ஆகியவை எந்த அறிவிப்பும் இன்றி நிராகரிக்கப்படும்.
7. மேலதிக தெளிவுபடுத்தல்களை றுஹுண பல்கலைக்கழகத்தின் கல்வி சாரா நிறுவனங்கள் பிரிவின் பிரதிப் பதிவாளரிடமிருந்து +9441222681 என்ற இலக்கத்தில் அல்லது recruitment.na@admin.ruh.ac.lk என்ற மின்னஞ்சல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

**பதில் பதிவாளர்,**
**றுஹுண பல்கலைக்கழகம்,**
**வெல்லமடம,**
**மாத்தறை.**

2026-06-09.